DOWNLOADED

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>**

**<u>அசல் வழக்கு எண். 350/2021</u>**

2023- ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 – ஆம் நாள் செவ்வாய்கிழமை வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW1 - வது நபரின் வாக்குமூலம் ( 1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி ) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வகுமார் | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | கிருஷ்ணமூர்த்தி | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | வரகூர் | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 40/2023 |

**<u>வாதி தரப்பு முதல் விசாரணை</u>** :-

1. நான் தாவா வழக்கில் மைனர் வாதிகளின் அடுத்த சிநேகிதன் ஆவேன், இவ்வழக்கை மைனர்களுக்காக நான் நடத்தி வருகிறேன் . என்னால் தாக்கல் செய்யப்படும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். 30.10.2015 ம் தேதியிட்ட வாதிகள் பெயரில் ஏற்பட்ட பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மென்ட் பத்திரம் அசல் **வா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வம்சாவளி பட்டியல் **வா.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 19.08.2013 தலைமையிடத்து துணை வட்டாட்சியர் கொடுத்த கணினி வழி பட்டா **வா.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 09.01.2015 குன்னம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பெறப்பட்ட கம்ப்யூட்டர் சிட்டா **வா.சா.ஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 29.07.2013 குன்னம் வட்டாட்சியரின் செயல் முறை உத்திரவு அசல் **வா.சா.ஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது . 19.11.2015 ஆன்லைன் கம்ப்யூட்டர் பட்டா **வா.சா.ஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 16.11.2015 ல் 5–ம் பிரதிவாதி பெயரில் புகலாக ஏற்பட்ட கிரய பத்தரத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 18.07.2015 வாதிகளின் தகப்பனால் காவல்

துறையில் கொடுத்த புகாரின் CSR அசல் **வா.சா.ஆ 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12.11.2015 வாதிகள் தரப்பு வழக்கறிஞர் மூலம் கொடுக்கப்பட்ட அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ 9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2–ம் பிரதிவாதி அன்பழகன் மறுத்தளிப்பு செய்த கவர் **வா.சா.ஆ 10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. 5–ம் பிரதிவாதி சுதாகர் மறுத்தளிப்பு செய்த கவர் **வா.சா.ஆ 11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12.07.2016 ஆன்லைன் கம்ப்யூட்டர் சிட்டா **வா.சா.ஆ 12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்து குறித்த ஆ பதிவேடு **வா.சா.ஆ 13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கிஸ்து ரசீதுகள் எண்ணிக்கை 2 **வா.சா.ஆ 14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை** :- இல்லை.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMJMKUNNAM